Cashew Plantations.

*335 Q.—THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state whether Cashew Plantations have been raised in the Public Sector in the State?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, ஆம். வனத் துறை 35,104 ஹெக்டேர் பரப்பில் முந்திரி வளர்த்துள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, சிந்திரி சிறக்கிறது வடக்கே, முந்திரித் தொழிலும் சிதைகிறது தெற்கே என்று அறிஞர் அண்ணு அவர்கள் 1957-ஆம் ஆண்டிலேயே குறிப்பிட்டார்கள். பல வாரியங்களை உருவாக்கிப் பல நல்ல காரியங்களைச் செய்யும் நமது அரசு முந்திரித் தொழில் மேலும் சிறப்படைய வாரியம் ஒன்று அமைத்திட ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, சமீபத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு காடுகள்-மலைத் தோட்டக் கழகத்தின் சார்பில் முந்திரிச் சாகுபடி ஏற்றுக்கொள்ளப்பட்டது. 21,486 ஹெக்டேர் பரப்பு இந்தக் கழகத்தினிடத்திலே, தனியாகக் கவனம் செலுத்துவ தற்காக ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: சார், பல தொழிற்சாலைகளில் இன்றைக்கு முந்திரிப் பருப்பு செய்ய முந்திரிக்கொட்டை இல்லாததால் அவர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதை விரிவு படுத்த அரசாங்கம் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமா? இப்பொழுது ஆப்பிரிக்கா போன்ற நாடுகளிலிருந்து "ரா-நட்ஸ்" இறக்குமதி செய் கிறார்கள். அதற்கு மாற்றுத் திட்டமாக இந்தத் திட்டத்தைச் சிறப்புத் திட்டமாக அமைக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, இப்பொழுது சுமார் 35,000 ஹெக்டேருக்கு மேல் முந்திரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு மேலும் புதிதாகப் பயிரிடுவதற்குத் திட்டம் இருக்கிறது. ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலமாக ஒவ்வொரு ஆண்டும் விஸ்தரிப்பதற் கான குறிப்பு இருக்கிறது. தனி வங்கிகளின் மூலமாம் சிறப்புத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்ற யோசனையும் இருக்கிறது.

Bamboo Cultivation.

*336 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state—

(a) the total acreage of land wherein bamboo cultivation is being done at present in Kanyakumari district; and

(b) the steps taken to expand the area under cultivation?